வென்ற்வேத்வில் தமிழ்க் கல்வி நிலையம்
Wentworthville Tamil Study Centre Inc

PO Box 557 Wentworthville NSW 2145

info@wtsc.org.au
**www.wtsc.org.au**

# தமிழ் அறிவுப் போட்டி 2025

## ஆண்டு 7

மாதிரி வினாக்கள்

போட்டி நடைபெறும் திகதிகள்: **25-10-2025** மற்றும் **01-11-2025**

**1.** இலங்கையில் தமிழரின் பாரம்பரிய பிரதேசங்கள் எவை?

விடை: வடக்கு,கிழக்கு பகுதிகள்

**2.** இம்முறை நடைபெற்று முடிந்த கலைவிழாவில் சிறப்பு விருந்தினருக்கு வழங்கிய நினைவுப்பரிசு என்ன?

விடை: திருக்குறள் - ஆங்கில மொழிபெயர்ப்புப் புத்தகம்

**3.** ஆத்திசூடியை இயற்றியவர் யார்?

விடை: ஔவையார்

**4.** மலையும் மலை சார்ந்த இடமும் எவ்வாறு அழைக்கப்படும்?

1) நெய்தல் 2) பாலை

**3) குறிஞ்சி** 4) முல்லை

**5.** முக்கனிகள் எவை?

விடை: மா, பலா, வாழை

**5.** அவுஸ்திரேலியாவின் தற்போதைய பிரதமர்**?**

1) கெவின் ரட் **2)** அந்தோனி அல்பனீசி 3) ஜோன் ஹாவார்ட்

**7.** அறுசுவைகளில் ஒன்று அல்லாதது எது**?**

1) இனிப்பு 2) புளிப்பு 3) வியப்பு 4) கசப்பு

**8.** 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பாடலை இயற்றியவர் யார்**?**

விடை: கணியன் பூங்குன்றனார்

**9.** உழவரின் திருநாள் என அழைக்கப்படும் பண்டிகை எது**?**

விடை: தைப்பொங்கல்

**10.** இந்தக் கருவியின் பெயர் என்ன**?**



1) தவில் 2) பறை **3)** மிருதங்கம்

**11.** தமிழ் நெடுங்கணக்கில் உள்ள முதல் எழுத்துக்கள் எத்தனை?

1) 18 2) 12 **3) 30** 4) 216

**12.** தமிழ் புத்தாண்டு எந்த மாதத்தில் கொண்டாடப்படும்?

விடை: சித்திரை

**13.** ஐம்பதாவது ஆண்டு கொண்டாடப்படும் விழா எவ்வாறு அழைக்கப்படும்?

**1)** பொன் விழா 2) வைர விழா

3) வெள்ளி விழா 4) மணிவிழா

**14.** பொன்னியின் செல்வன் நாவலை எழுதியவர் யார்?

விடை: கல்கி

**15.** யாழ்ப்பாணத்தை ஆண்ட தமிழ் மன்னன் யார்?

1) பண்டார வன்னியன் 2) எல்லாளன் **3)** சங்கிலியன்